## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (20.01.2016 முதல் 24.01.2016 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101
போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881

================================================================================

தேதி :19.01.16

### கடந்த 5 நாளில் நிலவிய வானிலை (14.01.2016 – 18.01.2016)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 22 |
| மேக மூட்டம் | 4 |
| ஈரப்பதம் (%) | 70 – 80 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 2 – 3 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 20/01/16 | தேதி-2 21/01/16 | தேதி-3 22/01/16 | தேதி-4 23/01/16 | தேதி-5 24/01/16 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0.5 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ | 22 | 22 | 22 | 22 | 22 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஈரப்பதம் (%) | 68 – 74 | 70 – 76 | 71 – 74 | 71 – 72 | 71 – 74 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

20.01.2016 முதல் 24.01.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 0.5 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**சம்பா : அறுவடை பருவம் ; தாளடி: முதிர்ச்சி பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள சம்பா நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த சம்பா நெல் வயல்களில் மெழுகு பதத்தில் நெல் தரிசு உளுந்து, பச்சைப்பயிறு விதைப்பதற்கு ஏற்ற தருணம். உளுந்து ஆடுதுறை 3 மற்றும் பச்சைப்பயிறு ஆடுதுறை 3 ஆகிய இரகங்கள் நெல் தரிசுக்கு ஏற்ற இரகங்கள்.
- பயிறு விதைகளை விதைப்பதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமொனாஸ் அல்லது 4 கிராம் என்ற அளவில் டிரைக்கோகிரம்மா விரிடி என்னும் உயிரியல் நோய் தடுப்பிளை கலத்தல் மூலம் விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்களை தடுக்கலாம்.
- அடுத்து பயிறு விதைகளை விதைப்பதற்கு முன் உயிர் உரங்களான ரைசோபியம் 200 கிராம் + பிஜிபிஆர் 200 கிராம் + அசோஸ்பைரில்லாம் 200 கிராம் ஆகியவற்றை ஒரு ஏக்டருக்கு உண்டான விதையுடன் கலந்து விதைக்கவும்.

**இயக்குநர்**